1982 மார்ச் 31]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : காரைக்குடியிலே பல்கலைக் கழகம் தொடங்குவதற்குக் காரணமே இராமநாதபுரம் ஒரு பின்தங்கிய மாவட்டம், அந்த மாவட்டத்திலே இருக்கின்ற பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியின் முடிவின் காரணமாக அந்த மாவட்டத்தை முன்னுக்குக் கொண்டுவரக்கூடிய அளவுக்கு அந்தப் பல்கலைக் கழகம் அமைய வேண்டுமென்று விரும்புகிறோம். அங்கே நடைபெறக் கூடிய ஆராய்ச்சிகள் விஞ்ஞான ரீதியாகவும் சமூக பொருளாதார ரீதியாகவும் சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய முறையிலே நடைபெறும்.

கல்விக் கூடங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்காக இட ஒதுக்கீடு.

*வினா எண் 327 **திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் உள்ள கலைக்கல்லூரிகள், தொழில் பயிற்சி பள்ளிகள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவைகளில் உடல் ஊனமுற்றோர்களுக்கு என இடங்கள் ஒதுக்கப்படுகிறதா?

(ஆ) இல்லையெனில் ஒதுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர்களுக்கு கல்வி நிறுனங்களிலே பொறியியல் கல்லூரிகளிலே இடம் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இட ஒதுக்கீட்டை தனியார் கல்வி நிறுவனங்களிலும் அமல்படுத்தச் சொல்லி அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இட ஒதுக்கீடு என்பது பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களிலும் செய்யப்படவேண்டுமென்று சொல்லி நாம் அந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், தனியார் நிறுவனங்கள் ஒரு சங்கத்தைச் சேர்த்துக்கொண்டு ஒரு கூட்டத்தைக் கூட்டி அந்த முறையில் கட்டாயப்படுத்தக் கூடாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படிப்பட்டவர்கள் அரசாங்கம்

சமுதாய நலன் குறித்து செய்கின்ற இத்தகைய காரியங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமே தவிர அதை எதிர்த்து போகிற போக்கைத் தவிர்க்க வேண்டுமென்று இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதன் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : ஜப்பான் நாட்டிலே நடைபெறுவதைப்போல் உடல் ஊனமுற்றோர்களுக்கு என்று தனியாக பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது தனியாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை குற்றவியல் நீதிபதிகள் பதவிக்கு நியமனம் செய்யும் திட்டம்.

*வினா எண். 328—திரு. மே. அ. இராஜ்குமார் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நீதித்துறையில் இரண்டாம் நிலை குற்ற இயல் நீதிபதிகள் பதவிக்கு வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை நியமனம் செய்யவிருக்கும் செயற்குறிப்பு அரசின பரிசீலனையில உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அம்முறை எப்பொழுது செயலபடுத்தப் படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒருங்கிணைப்புத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. அப்படி செயல்படுத்தப்பட்டவுடன், வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள் அந்த ஒருங்கிணைக்கப்பட இருக்கும் மாவட்ட முன்சீப் மற்றும்—மாஜிஸ்டிரேட்டு பதவிக்கு நியமிக்கப்படுவர்.

ஆற்காட்டில் குற்றவுயல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 329, திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் கொண்டுவர செயல்குறிப்பு அரசிடமுள்ளதா?